BSNL ஊழியர் சங்கம்
தமிழ் மாநிலம்

வேலூரில் வெற்றி விழாக்கூட்டம்

அன்பார்ந்த தோழர்களே,

வேலூர் மாவட்டத்தில் பணி நீக்கம் செய்யப்பட்ட தோழர்களை மீண்டும் பணிக்கு எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் ஒரு வரலாற்று சிறப்பு மிக்க போராட்ட்த்தை தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கமும், தமிழ் நாடு தொலை தொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்கமும் நட்த்தியது உங்கள் அனைவருக்கும் தெரியும். அதில் தமிழ் மாநில நிர்வாகத்திற்கும் நமக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாக இன்று வேலூர் மாவட்டத்தில் 85 தோழர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர். இதற்கான வெற்றி விழாக்கூட்டம் வேலூரில் 21.12.2014 அன்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திற்கு வேலூர் மாவட்ட சங்கங்களில் தலைவர்கள் தோழர் பழனி மற்றும் தோழர் S.N.சேகர் ஆகியோர் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இதில் BSNL ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் C.தங்கவேலு வரவேற்புரை நிகழ்த்தினார். வேலூர் போராட்டத்தினை முன்னின்று நடத்திய BSNL ஊழியர் சங்கத்தின் அப்போதைய மாவட்ட செயலாளர் தோழர் C.ஞானசேகரன், BSNL ஊழியர் சங்கத்தின் மாநில அமைப்பு செயலாளர் தோழர் M.பாபு, மாநில பொருளாளர் தோழர் K.சீனிவாசன், TNTCWU சங்கத்தின் மாநில உதவி செயலாளர் தோழர் C.பழனிச்சாமி, மாநில செயலாளர் தோழர் C.வினோத் குமார், BSNL ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் A. பாபு ராதாகிருஷ்ணன் மற்றும் BSNL ஊழியர் சங்கத்தின் உதவி பொது செயலாளர் தோழர் S. செல்லப்பா ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

அந்த விழாவில் கலந்துக் கொண்ட தோழர்கள் அனைவரும், இந்த போராட்டத்தில் உறுதியுடன் ஈடுபட்ட வேலூர் மாவட்ட தோழர்களையும், இவர்களுக்கு ஆதரவாக தமிழகம் முழுவது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதுடன் தலைமை பொது மேலாளர் அலுவலகத்தில் திரண்ட தோழர்களுக்கும், சுமூக தீர்வு காண ஒத்துழைத்த நிர்வாகத்திற்கும் பாராட்டுதல்களை தெரிவித்தனர். இந்த போராட்டத்தின் காரணமாக வேலையில் மீண்டும் இணைந்துள்ள தோழர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்ததுடன், மீதமுள்ள தோழர்களையும் பணிக்கு எடுக்கும் வரை மாவட்ட/மாநில சங்கங்கள் ஓயாது என்ற உறுதியையும் தெரிவித்தனர். BSNL ஊழியர் சங்கம் மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட காலத்தில் மாநில கவுன்சிலில் எடுத்து தீர்வு காணப்பட்ட ஒரு SDEக்கு இரண்டு ஒப்பந்த ஊழியர்கள் என்ற பிரச்சனையும் தற்போது வேலூர் மாவட்டத்தில் அமுலாகி உள்ளது இதற்கும் BSNL ஊழியர் சங்கமே காரணம். எனவே, BSNL ஊழியர் சங்கமும், TNTCWU சங்கமும் தான் அநீதி இழைக்கப்பட்ட தோழர்களின் மறு வாழ்வுக்கு காரணம் என்பதை முழுதும் உணர்ந்த தோழர்கள், மீதமுள்ள தோழர்களுக்கும் இந்த சங்கங்கள் தான் மீண்டும் பணி பெற்றுத் தருவார்கள் என நம்பிக்கையை இந்தக் கூட்டம் உருவாக்கியுள்ளது என்றால் மிகையாகாது.

எழுச்சியுடன் நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்கு TNTCWU சங்கத்தின் வேலூர் மாவட்ட செயலாளர் தோழர் ஹரி கிருஷ்ணன் நன்றி கூறி முடித்து வைத்தார்.

தோழர் S.செல்லப்பா, AGS, BSNLEU

தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன்.CS, BSNLEU

தோழர் C.வினோத் குமார் CS,TNTCWU

தோழர் C.பழனிச்சாமி ACS TNTCWU

தோழர் K.சீனிவாசன் CT, BSNLEU

தோழர் M.பாபு COS BSNLEU

தோழர் C.ஞானசேகரன் Ex DS BSNLEU

தோழர் C.தங்கவேலு DS BSNLEU

தோழர் S.N.சேகர் DP BSNLEU

தோழர் T.பழனி DP TNTCWU